கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், கிருஷ்ணகிரி அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை : திருமதி.ப.அமுதா,
கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்,
கிருஷ்ணகிரி.

**********

ந.க.01/2021/ ப.தொ நாள்:15.12.2021
பிலவ வருடம் மார்கழி மாதம் திருவள்ளுவராண்டு 2052

பொருள் : பணியாளர் தொகுதி - தமிழ்நாடு அமைச்சுப்பணி ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு IV ((தொகுதி IV) 2018-2019 மற்றும் 2019-20 தெரிவு செய்து கூட்டுறவு தணிக்கை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர் - கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்த திருமதி.மா.தாமரை, இளநிலை உதவியாளரின் பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை : 1.தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.2358/பிஎஸ்டி-ஐ/2020 நாள்:28.05.2020
2.கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.4184/2020/அபஅ.2 நாள்: 12.10.2020
3.இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.1777/2020/பதொ நாள்:16.10.2020

**********

ஆணை :

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தின் படி செல்வி.மா.தாமரை அமைச்சுப்பணி தொகுதி IV-ல் 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுக்கான எழுத்துத் தேர்வின் மூலம் நேரடி இளநிலை உதவியாளராகத் கூட்டுறவு தணிக்கை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இவ்வலுவலக கட்டுப்பாட்டில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக த.வி பிரிவிற்கு பணியமர்த்தம் செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து இவர் 16.10.2020 முற்பகல் இவ்வலுவலகக் கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளராக த.வி பிரிவில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இவர் பணியில் சேர்ந்த நாளான 16.10.2020 முற்பகல் முதல் இவரது பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ப.அமுதா 15/12/2021
கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்,
கிருஷ்ணகிரி.

15/12/2021

15.12.2021

பெறுநர்,

திருமதி.மா.தாமரை, இளநிலை உதவியாளர்,
கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.